IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.293/2009
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.25 p.m.

பி.வா.சா. 1 சாட்சி பாஸ்கரசேதுபதி த.பெ.இராமச்சந்திரன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 17.03.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் மேலஉரப்பனூர் கிராமத்தில் பஞ்சாயத்து தலைவராக இருந்தேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்து கண்மாய் மற்றும் மேலஉரப்பனூர் கண்மாய் பற்றி தெரியும் என்றால் சரிதான். எனது தனிப்பட்ட முறையிலும், மேலஉரப்பனூர் கிராமமக்கள் சார்பாகவும்தான் வழக்கை நடத்துகிறேன் என்றால் சரிதான். பொன்னமங்கலம் பெரியகண்மாயின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது.

2. பொன்னமங்கலம் பெரிய கண்மாயின் விஸ்தீரணம் 226 ஏக்கர் என்றால் எனக்கு தெரியாது. அதிலிருந்து பாசன வசதி பெறும் நிலங்களின் பரப்பளவு சுமார் 1000 ஏக்கர் என்றால் தெரியாது. மேலஉரப்பனூர் கண்மாயின் பாசன வசதி பெறும் நிலங்களின் பரப்பளவு எவ்வளவு என்றால் சுமார் 650 ஏக்கர் ஆகும். வழக்கு தாக்கல் செய்யும்போது வாதிகள் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில்தான் இவ்வழக்கு நடத்தப்பட்டு வருகிற விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

3. இவ்வழக்கை வாதிகள் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எங்களது கண்மாய்க்கும் மட்டும் பாசனவசதி வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். பொன்னமங்கலம் கால்வாயிலிருந்து வரும் நீரானது பொன்னமங்கலம் கண்மாய் நிரம்பிய பிறகு அதிலிருந்து வரும் உபரிநீர்தான் மேலஉரப்பனூர் கண்மாய்க்கு நீர் ஆதாரம் என்று வாதிகள் கோரியுள்ளனர் என்றால் சரிதான்.

4. இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு நீதிமன்ற ஆணையர் வழக்குச்சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை விபரம் எனக்கு முழுமையாக தெரிந்தும் ஏன் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்று கேட்டதால் தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 2வது பக்கத்தில் மேற்படி வாய்க்கால் வடக்கம்பட்டி வழியாக சென்று இறுதியில் உரப்பனூர் கண்மாய்க்கு தண்ணீர் செல்வதாக குறிப்பிட்டு என்னிடம் உரப்பனூர் கிராம மக்கள் புலவரைபடத்தினை காட்டினர் ஆனால் பூமியில் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஓடை போன்ற அமைப்பு உள்ள பகுதி எதுவும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் இல்லை என தெரிவிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது.

6. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் கிராம மக்கள் குறிப்பிடும் பகுதியில் சுடுகாடு, எரியூட்டும் கொட்டகை, மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் செட்டுகள் காணப்பட்டு சமதளபூமியாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு அருகில் பொன்னமங்கலம் கால்வாய் ஆனது மேற்சொன்ன சமதள பகுதியில் இருந்து 12அடி ஆழத்திலும் ஓடையின் அகலமானது 40அடியாகவும், மற்றும் இருபுறம் கரைகளின் அகலமானது 10 அடியாகவும் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

7. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை சம்மந்தமாக ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனக்கு அதுகுறித்து தெரியாது. பிரதிவாதிகளுக்காக நானே வழக்கை ஆரம்பமுதல் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் 117ல் வரும் ஓடை பிரிந்து என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 117ல் தான் நீதிமன்ற ஆணையர் ஓடையாக இல்லை என்றும், சமதளபகுதியாக உள்ளது என்றும் அதில் மேலேசொன்ன மற்ற அமைப்புகள் உள்ளது என்றும் கூறியுள்ளார் என்றால் சரிதான்.

8. சர்வே எண் 117க்கு முன்பாகவே பொன்னமங்கலம் வரத்து கால்வாயானது கிழக்கு நோக்கியும் அதற்கு பின்பாக தென்கிழக்காகவும் ஓடுகிறது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் வரைபடத்தில் சமதளபகுதிக்கு முன்பாகவே கிழக்கு நோக்கியும், தென்கிழக்கு நோக்கியும் மேற்படி கால்வாய் ஓடியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் நீதிமன்ற ஆணையர் தவறாக குறிப்பிட்டுள்ளார்.

9. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி கால்வாய்களை செப்பனிட அரசு இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி நிதி ஒதுக்கீடு என்று உள்ளதுபடி இன்றுவரை அரசு எவ்வித நிதி ஒதுக்கப்படவில்லை மற்றும் பணிகளும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் மேலஉரப்பனூர் கண்மாய் கால்வாயில் சமரணை கட்டுவது சம்மந்தமாக என்று மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டு எவ்வித சர்வே எண்களும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

10. வழக்குச் சொத்து சம்மந்தமான பி.வா.சா.ஆ.1முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் தவிர்த்து வேறு வருவாய் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரை மட்டுமே தாக்கல் செய்தநிலையில் மேற்படி அதற்குமுரணாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. மேலேந்தல் கண்மாயிலிருந்து வரும் உபரிநீரானது மேலஉரப்பனூர் கண்மாய்க்கு வரும் என்றால் சரியல்ல. மேற்படி மேலேந்தல் கண்மாயிலிருந்து வரும் உபரிநீர் எங்கே செல்கிறது என்றால் எனக்கு தெரியாது. மேலேந்தல் கண்மாயின் உபரிநீர் உரப்பனூர் கண்மாய்க்கு செல்கிறது அதனை மறைத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல.

( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 1.05 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.17 17:17:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.